சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண்.12/2023

2026ம் ஆண்டு ஜூன் மாதம் 17ம் நாள் PW3 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் திரு. குணசேகரன்<br>த/பெ. ராமசாமி | நாள் 17.06.2026 |
| வயது. | வட்டம் |
| கிராமம். | மாவட்டம். |

**<u>வாதி சாட்சி 3 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>**

1. நான் வழக்கில் 3ம் தரப்பினர் மற்றும் வாதி தரப்பு சாட்சி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான்.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2. இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி அழைத்ததின் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே நிலத் தகராறு உள்ளது என்றால் சரிதான். வழக்கு அ அட்டவணை சொத்தில் புல எண்கள் எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு கிழக்கே சிவக்குமார் நிலம், தெற்கே தெய்வயாணை நிலம், வடக்கே மணி நிலம் மற்றும் மேற்கே சிவக்குமார் நிலம். வழக்கு அ

அட்டவணை சொத்திற்கு கிழக்கே தெய்வயாணை, பெருமாள், சங்கர், வீராசாமி, ஏழுமலை, கோவிந்தசாமி மற்றும் நான் உள்ளோம். பிரதிவாதிகள் அவர்கள் நிலத்தில் எவ்வித சுற்றுசுவரோ அல்லது வேலியோ அமைக்கவில்லை. வாதி நிலத்தை சுற்றி பிரதிவாதிகளின் நிலம் இல்லை என்று சொன்னால் சரிதான். அந்த பகுதியில் மொத்தம் 500 ஏக்கர் நிலம் இருக்கும் என்று சொன்னால் சரிதான். அந்த 500 ஏக்கர் சுற்றி வேலி எதுவும் போடவில்லை.

3. பிரதிவாதிகள் தங்கள் நிலத்தில் பயிர் செய்யும் போது வாதி வேறு வழியாகத் தான் தன் நிலத்திற்கு செல்வார் என்றால் சரிதான். அதே போல் வாதி வேறு வழியாக ஆற்றங்கரை வழியாகவோ, வன்னியநல்லூர் வழியாகவோ வருவார் என்றால் சரிதான். வாதி தன் நிலங்களில் செம்மரம் மற்றும் தேக்கு மரங்கள் கடந்த 5 வருடங்களுக்கு முன்பு வைத்தார் என்றால் 3 வருடங்களாகும். அதனால் வாதிக்கு வழி தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி செல்வதாக கூறும் வழியின் புல எண் எனக்கு தெரியாது. வாதிகள் எக்காலத்திலும் பிரதிவாதிகளின் நிலம் வழியாக சென்றது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

4. வாதியின் நிலத்திற்கு கீழ் புறம் வழியாக செல்லாம் என்றால் அங்கு பயிர் வைக்காமல் இருந்தால் செல்லலாம். அவர்கள் எவ்வித ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரிதான். 2022 ம் வருடம் அக்டோபர் மாதம் பிரதிவாதிகள் வாதிகளின் விவசாய நிலத்தை வேலை செய்வதை தடுத்ததாக கூறுவதை நான்

பார்க்கவில்லை. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் வாதிக்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை